DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC.No. 121/2024 Crime No. Station Bhavani

| Name | PW-3- வினோத்குமார் | Village | |
|---|---|---|---|
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 20.05.2025 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் சின்னபெரிச்சிபாளையத்தில் குடியிருந்து கொண்டு, எலக்ட்ரீசியனாக வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை, சுமார் 10 மாதங்களுக்கு முன்பு ஒருநாள் மாலையில் நானும், சிவலிங்கம் என்பவரும் பவானி மூன்று ரோட்டில் உள்ள அம்மன் மெஸ்ஸில் டீ குடித்துக் கொண்டிருந்தபோது, அன்றைய தினம் காலையில் அம்மன் மெஸ் முன்பு நடைபெற்ற சாலை விபத்து தொடர்பாக போலீசார் விபத்து நடைபெற்ற இடத்திற்கு வந்து விசாரித்து படம் வரைந்து கொண்டு இருந்தார்கள். எங்கள் இருவரிடமும் சாட்சி கையொப்பம் செய்யும்படி கேட்டுக் கொண்டார்கள். நாங்களும் சாட்சி கையொப்பம் செய்தோம். தற்போதைய என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இந்த வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில் வைத்து ஆவணத்தில் கையொப்பம் செய்யப்பட்டது என்றால், சரியல்ல. சம்பவயிடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். நீங்கள் முதல் விசாரணையில் சொன்னதுபோல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எந்த ஆவணத்திலும் கையொப்பம் செய்யவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க நீதிமன்றத்தில் சம்பவயிடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால், சரியல்ல.

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.06.02 21:28:07 +0530

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC.No. 121/2024 Crime No. Station Bhavani

| Name | PW-4- சிவலிங்கம் | Village | |
|---|---|---|---|
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 20.05.2025 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் சின்னபெரிச்சிபாளையத்தில் குடியிருந்து கொண்டு, கூலி வேலை செய்து வருகிறேன். தேதி மாதம் நினைவில்லை, கடந்த சுமார் 10 மாதங்களுக்கு முன்பு ஒருநாள் மாலையில் நானும், வினோத்குமார் என்பவரும் பவானி மூன்று ரோட்டிலுள்ள அம்மன் மெஸ் கடையில் டீ குடித்துக் கொண்டிருந்தோம். அன்றைய தினம் காலையில் அம்மன் மெஸ் முன்பாக நடைபெற்ற சாலை விபத்து தொடர்பாக போலீசார் விபத்து நடைபெற்ற இடத்திற்கு வந்து விசாரித்து, படம் வரைந்து கொண்டிருந்தார்கள். என்னிடமும், வினோத்குமாரிடமும் சாட்சி கையொப்பம் போடும்படி கேட்டுக் கொண்டதால், நாங்கள் இருவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையப்பம் என்னுடையதுதான். பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நீங்கள் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் தெரியாது என்றால், போலீசார் நான் டீ குடித்துக்கொண்டு இருக்கும்போது படம் வரைந்து கொண்டிருந்தார்கள். அதில் கையொப்பம் செய்தேன்.

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.06.02 21:28:24 +0530

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC.No. 121/2024 Crime No. Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW-2- ராதாமணி | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 20.05.2025 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் பவானியில் குடியிருந்து கொண்டு, பவானி மெயின் ரோட்டில், அம்மன் மெஸ் என்ற பெயரில் டீக்கடை வைத்து நடத்தி வருகிறேன். தேதி மாதம் நினைவில்லை, சுமார் 8 மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் காலை சுமார் 08.00 மணியளவில் இந்த விபத்தில் இறந்துபோன ஆறுமுகம் என்பவர் எனது கடையின் முன்பு சாலையை இடது புறத்திலிருந்து, வலது புறமாக நடந்து, கடந்து சென்றபோது மேட்டூரில் இருந்து வந்த பைக் மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டது. விபத்தை பார்த்த நான் அருகில் சென்று பார்த்தபோது அவர் மயங்கி நிலையில் இருந்தார். அருகில் இருந்தவர்கள் அவரது மகனுக்கு தகவல் தெரிவிக்கவே, அவர் மகன் வந்து ஆம்புலன்ஸ் மூலமாக அந்த பெரியவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். விபத்து ஏற்பட்டவுடன் கூட்டம் அதிகமாக இருந்ததால் விபத்து ஏற்படுத்திய பைக்கை ஓட்டி வந்த நபரை நான் சரியாக பார்க்கவில்லை. இந்த வழக்கு தொடர்பாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நீங்கள் சத்தம் கேட்டுத்தான் சம்பவத்தை பார்த்தீர்கள் என்றால், சரிதான். விபத்தானது ரோட்டின் கிழபுறத்தில் நடந்தது என்றால், சரிதான். விபத்தானது இறந்த நபரின் அஜாக்கிரதையால் தான் ஏற்பட்டது என்றால்.சரியல்ல .

Taken down before me in open court
readover to the witness in the presence

of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.06.02 21:28:49 +0530

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC.No. 121/2024 Crime No. Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW-1- மினிதுரை | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 20.05.2025 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் அருமைகாரன்புதூரில் குடியிருந்து கொண்டு, கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன ஆறுமுகம் எனது அப்பா ஆவார். தேதி மாதம் நினைவில்லை, கடந்த 11 மாதங்களுக்கு முன்பு ஒருநாள் காலையில் எனது அப்பாவிற்கு மூன்று ரோடு அம்மன் மெஸ் முன்பு சாலை விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டு நான் விபத்து நடந்த இடத்திற்கு சென்று எனது அப்பாவை ஒரு தனியார் ஆம்புலன்ஸ் மூலம் பவானி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். பின்னர் அங்கிருந்து பவானி மெடிக்கல் சென்டர் மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அழைத்துச் சென்றேன். பின்னர் மீண்டும் நசியனூர் வீணா மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். பின்னர் பவானி காவல் நிலையம் சென்று மேற்படி விபத்து தொடர்பாக புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது . 7 நாட்கள் வீணா மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த எனது அப்பாவை சேலம் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அழைத்துச் சென்றேன். அங்கு 6 நாட்கள் சிகிச்சையில் இருந்த எனது அப்பா சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார். 26.06. 2024 ஆம் தேதியன்று சேலம் அரசு மருத்துவமனையில் நடைபெற்ற பிரேத விசாரணையின் போது எனது அப்பாவின் பிரேதத்தை அடையாளம் காட்டி உடனிருந்தேன். இந்த வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால், சரிதான். சம்பவமானது யாருடைய அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்ற விவரமும் உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால், சரிதான்.

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.06.02 21:29:00 +0530